**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**MCOP No.272/2023 and 273/2023**

**01.04.2026 ம.சா.1 அர்விந்த் த/பெ.சரவணன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் 2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. 3ம் மனுதாரர் லட்சுமிபிரியா என்னுடைய தாயார். 2ம் மனுதாரர் கிருத்திகா என் அக்கா. 4,5 மனுதாரர்கள் மதிவானி மற்றும் சுதாவாணி என் அப்பாவுடன் பிறந்த சகோதரிகள். அவர்கள் திருமணம் ஆகி தனியாக குடியிருந்து வருகிறாகள் என்றால் சரிதான். 4,5 மனுதாரர்கள் என் தந்தையின் வருமானத்தை நம்பி இருந்தது கிடையாது என்று சொன்னால் என் அப்பாதான் அவர்களுக்கு உதவி செய்து வந்தார். MCOP No. 272/2023 மனுவின் இறந்த திலகவதி என்னுடைய பாட்டி. அவர் இறப்பதற்கு முன் என் அப்பாவுடன்தான் இருந்தார். விபத்து சமயத்தில் என் தந்தை ஓட்டிச்சென்ற வாகனம் என் தாயாருக்கு சொந்தமானது. அந்த வாகனத்தின் காப்பீட்டாளரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. நான் மனுவில் வாகனத்திற்கான சேதத்தையும் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அதை அந்த வாகனத்தின் காப்பீட்டாளரிடம்தான் கேட்க முடியும் என்று சொன்னால் சரிதான். அதற்காக எனக்கு பகுதியான சேதத்திற்காக இழப்பீடு பெற்றுக்கொண்டேன். ஆனால் அதற்கு மேல் செலவானது. நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.8 வாகனத்திற்கான சர்வீஸ் ரசீதுபடி ரூ.36,410 /- செலவானது என்றால் சரிதான். அதற்கு முன்தொகையாக ரூ.10,000/- நான் செலுத்தினேன் என்றால் சரிதான். மீதமுள்ள ரூ.26,410/- ஐ நான்தான் செலுத்தினேன். அதில் ரூ.8,000/- காப்பீட்டாளர் கொடுத்தார். நான் செலவுசெய்த முழு தொகையும் அந்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்திடம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. என் தந்தை வாகனத்தை சாலையின் வலது பக்கத்தில் இருந்து இடது பக்கமாக திடீரென திருப்பியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் தந்தை எந்த வித சைகையும் செய்யாமல் திடீரென திரும்பியதால்தான் பின்னால் வந்த வாகனத்தின் மீது மோதியது என்று சொன்னால சரியல்ல. இந்த விபத்திற்கு என் தந்தையின் கவனக்குறைவுதான் காரணம் என்றும் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் மீது எந்த தவறும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை மாதம் ரூ. 60,000/- சம்பாதித்தார் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். என் தந்தை நிரந்தர பணியாளர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள ஆவணத்தின்படி அவர் ஒரு வருட ஒப்பந்த

அடிப்படையில்தான் பணி செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணப்படி என் தந்தையின் மொத்த மாத வருமானம் ரூ.19,500/– தான் என்று சொன்னால் சரியல்ல. அதனுடன் பல பண சலுகைகள் அவர் பெற்றுள்ளார். அவர் வருமான வரி செலுத்தியுள்ளார். என் தந்தை வருமான வரி செலுத்தியதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வருமானவரி ஆவணங்களை தாக்கல் செய்திருந்தால் என் தந்தையின் வருமானம் தெரியவந்திருக்கும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இவ்வழக்கில் அதிக இழப்பீடு பெறுதற்காக பொய்யான தகவல் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

Sd/– B.C. Gopinath
Additional District Judge,
Tiruvannamalai.